NEWS RELEASE

# SRI RAMACHANDRA

**INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH**

(Deemed to be University)

Porur, Chennai-600 116. www.sriramachandra.edu.in

## UNION SPORTS MINISTER OPENS WORLD CLASS HOCKEY TURF AT SRIHER

Chennai, 29th October, 2019.

Union Minister of State for Youth Affairs & Sports Mr. Kiren Rijiju today inaugurated a world class new hockey astro turf at Centre for Sports Sciences, Sri Ramachandra Institute of Higher Education and Research at Porur, Chennai. He also inaugurated Sri NPV Ramaswamy Udayar Hockey Centre and Memorial Trophy for Tamilnadu state level tournament. After an extensive visit of the sports science centre and other sporting facilities he said sports medicine and sports science can play a major role in enhancing India's chances in India becoming a sporting power and in achieving greater glory in future international events. The union government is giving tro priority to sports development in the country to get the country within the top ten medal winning countries in 2028 Olympics. Under the new education policy sports will become an integral part of education so that people all over the country get an equal opportunity in sports competitions. Commending the efforts of the Centre for Sports Science he said the union government will have fruitful collaborations in the future.

The Minister also honoured former Opympic indian hockey players like Mr. Munir Sait, Mr.Govinda, Mr.Mohammad Riaz, Mr.Tirumalvalavan and Mr.Adam Sinclaire.

Speaking on the occasion Dr.S.Arumugam, Director, CSS said sports persons trained at the centre have won laurels in several national and international level events and our aim is to get an olympic gold in the next few years.

Mr. Baskaran, who led the Indian Hockey team to a gold medal in the 1980 Moscow Olympics said the astro turf and the hockey centre will help train international level players.

The Chancellor Mr.V.R.Venkataachalam, Pro Chancellor Mr.R.V.Sengutuvan and Vice Chancellor Dr.P.V.Vijayaraghavan were among those who participated in the event.

………

For more information…..……………………………… ;

Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578,
mediarelations@sriramachandra.edu.in

NEWS RELEASE

# SRI RAMACHANDRA

**INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH**

(Deemed to be University)

Porur, Chennai-600 116. Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

## ஸ்ரீ இராமச்சந்திராவில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் உலகத்தர ஹாக்கி ஆடுதளத்தை துவக்கி வைத்தார்

சென்னை, 29 அக்டோபர் 2019

ஸ்ரீ இராமச்சந்திரா உயர்க்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள விளையாட்டு அறிவியல் மையத்தின் உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி ஆடுதளத்தை மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ இன்று துவக்கி வைத்தார். அவர் திரு. N.P.V. ராமசாமி உடையார் ஹாக்கி மையத்ததையும், தமிழ்நாடு அளவிலான ஹாக்கி போட்டிக்கான நினைவு ட்ரோ.ஃபி ஒன்றையும் துவக்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், ஸ்ரீ இராமச்சந்திராவின் விளையாட்டு அறிவியல் மற்றும் விளையாட்டு மருத்துவம் இந்தியா பன்னாட்டு போட்டிகளில் வெற்றிபெற தக்க சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்க உதவும். இந்திய அரசு தற்போது விளையாட்டு துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. 2028 ஒலிம்பிக்கில் இந்தியா பதக்கம் பெறும் நாடுகள் பட்டியலில் முதல் 10 இடங்களில் வரவேண்டும் என்பது இலக்காக உள்ளது. புதிய கல்விக் கொள்கையில் விளையாட்டு, பாடப்படிப்பில் ஒருங்கிணைக்கப்பட்டு, நாட்டிலுள்ள எல்லா தரப்பினரும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் வண்ணம், ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது என்று கூறினார்.

ஸ்ரீ இராமச்சந்திராவில் விளையாட்டு அறிவியல் மையத்தின் பயிற்சி மற்றும் பிற மருத்துவ வசதிகளை பார்வையிட்ட அமைச்சர் வரும் ஆண்டுகளில் இதனோடு, இந்திய அரசு நல்ல கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று கூறினார். அமைச்சர் முன்னாள் இந்திய ஒலிம்பிக் ஹாக்கி வீரர்கள் திரு. முனிர் சேட், திரு. கோவிந்தா, திரு. முகமது ரியாஸ், திரு. திருமால்வளவன் மற்றும் திரு. ஆடம் சிக்லர் ஆகியோருக்கு நினைவு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய இந்த மையத்தின் இயக்குனர் Dr. S. ஆறுமுகம், ஸ்ரீ இராமச்சந்திராவில் பயிற்சி பெற்ற போட்டியாளர்கள் பலர் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பரிசுகள் பெற்றிருக்கிறார்கள் என்றும் அடுத்த சில ஆண்டுகளில் இம்மைய விளையாட்டு மாணவர்கள், ஒலிம்பிக் தங்கம் பெறுவது எங்கள் இலக்கு என்று கூறினார்.

1980 மாஸ்கோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் திரு. பாஸ்கரன் புதிதாக துவக்கப்பட்டுள்ள ஆஸ்ட்ரோ ஆடுதளமும், ஹாக்கி மையமும் உலகத்தர போட்டியாளர்களை உருவாக்க உதவும் என்று கூறினார்.

வேந்தர் திரு. V.R. வெங்கடாசலம், இணைவேந்தர் திரு. R.V. செங்குட்டுவன் மற்றும் துணைவேந்தர் Dr. P.V. விஜயராகவன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

--------------------------------------

மேலும் விபரங்களுக்கு.......

Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578,

mediarelations@sriramachandra.edu.in